# தமிழ்நாடு சமூகப் பணியாளர் குழுமம் குறித்து வரைவு செய்யப்பட்ட மசோதா

**பின்னணி :**

சமூகப்பணி என்பது நூறு ஆண்டுகளுக்கும் மேலாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாகும். இந்தியாவில் 1936 ஆம் ஆண்டு மும்பையில் முதல் சமூகப்பணிப் பள்ளி "சர் தொரப்ஜி டாடா கிராஜீவேட் ஸ்கூல் ஆஃப் சோஷியல் ஒர்க் (தற்போது டாடா இன்ஸ்டியூட் ஆஃப் சோஷியல் சயின்ஸ் என வழங்கப்படுகிறது) நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் 1952 ஆம் ஆண்டு கில்டு ஆஃப் சர்வீஸ் என்ற நிறுவனத்தால் முதல் சமூகப்பணிப்பள்ளி துவக்கப்பட்டது. நாட்டின் புகழ் பெற்ற நிறுவனமாக "மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் சோஷியல் ஒர்க்" இருந்து வருகிறது.

இந்தியாவில் தகுதி சார் சமூகப் பணியாளர்கள், நல்வாழ்வுப்பணிகளிலும், வளர்ச்சிப்பணிகளிலும் சிறிய அளவில் இருந்து பெரிய அளவு வரையிலும் அரசுப் பணியிலும் தொண்டு நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் சர்வதேச நிறுவனங்களிலும் மற்றும் சமுதாயத்தில் மக்களோடு மக்காளகவும், சமூக இயக்கங்களிலும் பணிபுரிந்து வருகிறார்கள். சமூகப்பணி வேலை என்பது ஒடுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த மக்களை அதிகாரம் படைத்தவர்களாக மாற்றவும், குடியரசு நாட்டில் அவர்களுடைய உரிமைகளை பெற்றுத்தரவும் மேற்கொள்ளப்படும் பணியாகும். இப்பணி மதச்சார்பற்ற முறையில், மனித கௌரவம், மனித உரிமைகள், சமூக நிதி போன்றவற்றை வழிகாட்டு நெறிமுறைகளாகக் கொண்டுள்ளது. மேலும் இந்நெறிமுறைகள் சுயநற்குணங்களையும் மக்களின் பங்கேற்பினையும் சுயதீர்மானத்தையும், உள்ளூர், சுயஆட்சியையும், அமைதியான, இனக்கமான, சமூக உறவையும் மேம்படுத்தகிறது.

சமூகப் பணி என்பது விஞ்ஞான அடிப்படை அறிவையும் மக்களுடன் சேர்ந்து பணியாற்றும் திறமையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. தகுதிசார் சமூகப் பணியாளர்களின் திறமை அவர்கள் பெறும். கல்வியின் தரத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகும். இன்று இந்தியாவில் 200க்கும் மேற்பட்ட சமூகப்பணி கல்வித்திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 150 சமூகப்பணி கல்வி திட்டங்கள் உள்ளன. தகுதி சார்ந்த கல்வியறிவுத்திறனோடு

பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக குறிப்பிட்ட களப்பணிகளில் உரிய வழிகாட்டுதலோடு சமூகப்பணிகளை செய்ய பழக்கப்படுத்துகிறார்கள்.

மாநிலத்தின் சமூகப் பணித்திட்டங்களின் அமைப்பு, மாநிலத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் பாடப்பிரிவின் அளவும் கல்வித்தரமும் சரியாக அமையவில்லை என்பதை காட்டுகிறது. சமூகப்பணிக்கல்வியானது எந்த அளவிலும், எந்த பிரிவிலும், எந்த ஒழுங்கு முறையும் இன்றி திட்டப்படப்படா காளான்களைப் போல பெருகி வருகிறது.

நேஷனல் அசெஸ்மெண்ட் அண்ட் அக்ரிடிடேஷன் கவுன்சில் (NAAC) 2005 ன் சமூகப்பணி நிறுவனங்களின் சுய ஆய்வு என்ற கையேட்டில் சமூகப் பணி கல்வியின் நோக்கங்களை கீழ்க்கண்டவாறு தொகுத்தளித்துள்ளது.

1. தகுதி சார் சமூகப் பணியாளர்களை தயார்படுத்தி அவர்களுக்கு தொடர்ந்து சமூகப்பணி பழக்கத்தினையும், நிர்வாகத்திறன் கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வுகளையும் அளிக்க வேண்டும்.

2. களப்பணி திட்டங்களை மேற்கொண்டு சமூகப்பணியாளர்களின் பங்கினை ஆற்றச் செய்த வித்தியாசமான அனுபவங்களையும், நிர்வாகத்திறமையையும், பயிற்சிகளையும் அளித்து அனுபவத்தின் அடிப்படையிலான ஆய்வுகளை கொடுக்கும் வகையில் மாணவர்களுக்கு கனப்பணி கொடுக்கப்பட வேண்டும்.

3. ஆதராங்களை அடிப்படையாகக் கொண்ட சமூகப்பணி அனுபவங்களையும் நிர்வாகத்திறன், கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வுகளில் விஷயங்களை மேம்படுத்தி அனைவருக்கும் அளித்திட வேண்டும்.

4. சமூகப் பணியிலும், நல்வாழ்வுப் பணிகளிலும், முன்னேற்றப்பணிகளிலும், கொள்கைள் மற்றும் திட்டங்கள் தீட்டுவதிலும், கற்றுக்கொடுத்தலிலும், ஆய்வுகளை மேற்கொள்வதிலும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும், ஆலோசனை வழங்கி சமூகப்பணியில் உள்ள தகுதிசார் சங்கங்களையும், அமைப்புகளையும் வலுப்படுத்த வேண்டும்.

5. சுதந்திரமான, பங்கேற்பு முறையிலான கல்வி முறையை மேம்படுத்த வேண்டும்.

மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றவும், சமூகப்பணிக்கல்வித்தரத்தை ஒழுங்குபடுத்தவும், தகுதிசார் குழு இன்றியமைடயாதது ஆகும். பல்கலைக்கழக மானியக்குழு (UGC, 1980) வின் சமூகப்பணி கல்விக்கான இரண்டாவது மறு ஆய்வுக் குழுவானது, சமூகப்பணி கல்வியையும் உயர்த்தவும் அதன் தரத்தை பாதுகாக்கவும், "சமூகப்பணிக் கல்விக்கான தேசியக்குழு" ஒன்றை நிறுவலாம் என்று பரிந்துரை செய்துள்ளது. தற்போது தயாரிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தகுதிசார் சமூகப்பணிக்கல்விக்குழுவின் மீதான மசோதா தகுதிசார்பணிச்சங்க உறுப்பினர்களின் கூட்டு முயற்சியால் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தோற்றுவாய் :-**

இந்த மசோதாவானது சமூகப்பணி கல்வியை உயர்த்தவும், மேம்படுத்தவும், மனிதவளத்தை மேம்படுத்தவும், தொழில் தகுதியை உறுதிசெய்யவும், சமுதாயத்திற்கும் இதில் அங்கம் வகிப்பவர்களுக்கும், சமூகப்பணித் தொழிலை தார்மீக பொறுப்பாக்குவதற்கும், இந்த மசோதா இயற்றப்பட்டுள்ளது. இம்மசோதாவானது , சமூகப்பணிக்கல்வித்திட்டங்கள் மற்றும் கல்வியின் அங்கீகாரம் அல்லது ரத்து தகுதிசார் சமூகப்பணியாளர்களை பதிவு செய்வது அல்லது பதிவை நீக்குவது, மற்றும் சமூகப்பணிக்கல்வியின் தரத்தை ஒழுங்குபடுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

**உள்ளடக்கம்**


| பகுதி எண் | தலைப்புகளும், பிரிவுகளும் | பக்கம் எண் |
|---|---|---|
| I | முன்னுரை | |
| | 1. சட்டம் | |
| | 2. விளக்கங்கள் | |
| ii. | குழு நிறுவுதல் | |
| | 3. குழு நிறுவுதல் | |
| | 4. உறுப்பினர்களின் பணிபுரியும் காலம் மற்றும் | |

| | | |
|---|---|---|
| v. | பணிமுறை விதிமுறைகள் | |
| | 5. தகுதியின்மை | |
| | 6. உறுப்பினர்கள் பணியில் இருந்து வெளியேறுதல் | |
| | 7. ஊதிய மற்றம் படிகள் | |
| | 8. அமர்வுகள் | |
| iii. | குழுவின் பணிகள் | |
| | 10. கல்விப்பணி செயற்பாடுகள் | |
| | 11. நிர்வாகப்செயற்பாடுகள் | |
| | 12. தர மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல் | |
| | 13. தகுதிசார் சமூகப்பணியாளர்களின் பதிவு | |
| | 14. குறை களைதல் மற்றும் தகுதிசார் சமூகப்பணியாளர்களின் பதிவை நீக்குதல் | |
| | 15. ஒழுங்குமுறை செய்யப்படாத வளர்ச்சி பணிகள் | |
| | 16. சமூகப்பணி மனித வளங்களுக்காக திட்டமிடுதல் | |
| | 17. விவரங்களை நிர்வகித்தல் | |
| | 18. தொடர்பு ஏற்படுத்துதல் | |
| | 19. மசோதாவில் திருத்தங்கள் மற்றும் குழுவைக் கலைத்தல் | |
| | 20. சமூகப்பணிக் கல்வித்திட்டங்களையும் பாடங்களையும் வழங்கும் கல்வி நிறுவனங்களை அங்கீகரித்தல் | |
| | 21. அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் மூலமாக புதிய படிப்பு அல்லது பயிற்சி அளிக்க அனுமதி வழங்கல் | |
| | 22. மசோதாவின் வழிவகைகளில் உள்ள முரண்பாடும் அதனால் ஏற்படும் விளைவுகளும் | |
| | 23. மேல் முறையீடு | |
| v. | நிதி மற்றும் அறிக்கைகள் | |

| | | |
|---|---|---|
| | 24. குழுவின் நிதி மற்றும் வரவு செலவு | |
| | 25. ஆண்டறிக்கை | |
| | 26. கணக்குகளும் மற்றும் தணிக்கைகளும் | |
| | 27. செலுத்துதல் | |
| Vi | சட்டங்களும் ஒழுங்கு முறைகளும் | |
| | 28. விதிகளும் ஒழுங்குமுறை விதிகளும் | |
| | 1. சமூகப் பணிக்கல்வித்திட்டத்தின் தரங்கள் | |
| | 2. சமூகப்பணி கல்வித்திட்டத்திற்கான மாதிரி பாடத்திட்டம் | |
| | 3. அங்கீகாரம் மற்றும் பதிவு செய்தலின் நெறிமுறைகள் | |
| | 4. கொள்ளலும் கொடுத்தலும் என்றும் நிகர்மைக்கான நெறிமுறைகள் | |
| | 5. தகுதிசார் பணியாளர்களுக்கான ஒழுங்கவியல் தொகுப்பு | |
| | 6. சமூகப்பணியாளர்கள் பதிவு குறித்த நெறிமுறைகள் | |
| | 7. வல்லுநர் குழு மற்றும் இதர குழுக்கள் | |
| | 29. விதிகள் | |


# பகுதி - 1

# முன்னுரை

**பிரிவு - 1 :**

**மசோதா**

1. இந்த மசோதா தமிழ்நாடு தகுதிசார் சமூகப்பணிக் கல்வி மற்றும் பயிற்சிக்கான தமிழகக் குழு என்றழைக்கப்படும்.
2. இது தமிழ்நாடு முழுவதுக்கும் பொருந்தும்
3. இம்மசோதா, தமிழக அரசின் அரசிதழில் அறிவிப்பு செய்கின்ற தேதியில் இருந்து அமலுக்கு வரும்.

பிரிவு 2:

**விளக்கங்கள்**

## a) இம்மசோதா

1. குழு என்பது மசோதாவின் பகுதி மூன்று, பிரிவு 5இல் அமைக்கப்பட்டுள்ள தகுதிசார் சமூகப் பணி கல்வி மற்றும் பயிற்சிக்கான தமிழ்நாட்டுக் குழு ஆகும்.
2. தலைவர் என்றால் இக்குழுவின் தலைவர்
3. துணைத்தலைவர் என்றால் இக்குழுவின் துணைத்தலைவர்
4. உறுப்பினர் ஏ்னறால் இக்குழுவின் தலைவர்,துணைத்தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களும்.
5. செயலாளர் என்றால் இம்மசோதாவின் கீழ் நியமிக்கப்படும் நிர்வாகப் பணியின் உறுப்பினர் அல்லாத செயலாளர் ஆவார்.
6. தகுதிசார் சமூகப்பணி (இனி சமூகப்பணி என்றே இதில் குறிப்பிடப்படும்) என்பது ஒரு தொழில்

**இத்தொழில்**

- ஒடுக்கப்பட்ட, நலிவடைந்த மக்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் அடிப்படை தேவைகளுக்காகவும் மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளதாகும்.

- தனி மனித மற்றும் குடும்பங்கள் கூடிய ஒட்டுமொத்த சமுதாயம், குழுக்கள், நிறுவனங்கள் மற்றும் மாநிலம், அரசு, தொழில் நிறுவனங்கள்,ஊடகங்கள் மற்றும் இதர சமுதாய அமைப்புகளின் மாற்றத்திற்காக பணிபுரிவதாகும்.

- அடித்தள மக்களுடன் நிறுவனத்தின் நிர்வாகம், கொள்கை ஆக்கம், மாற்றம் மற்றும் திட்டமிடுதல், கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வின் மூலமாக செயல்படுத்துவதாகும்.

- ❖ மனித கௌரவத்தின் மதச்சார்பற்ற, தொழில்,மனித உரிமைகள் மற்றும் சமூக நிதி போன்றவற்றால் வழி நடத்தப்படுகிறது.

- ❖ பலதரப்பட்ட அறிவுத்திறமைகள் அறிவு, திறன் மற்றும் மக்களுடன் பணிபுரிவதில் உள்ள மனப்பாங்கு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

7. இம்மசோதாவில் வகுத்தளிக்கப்பட்டவாறு பல்கலை கழக நிதிக்குழுச் சட்டம் 1956 (UGC) பிரிவு 2 F மற்றும் 3 மற்றும் 12(b) அல்லது மாநில சட்டம் (UGC அல்லாத) போன்றவற்றால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் அளிக்கும் சமூகப்பணிக்கல்வித்திட்டங்கள் மற்றும் கல்விக் கூடத்தில் கற்றுத்தரப்படும் மற்றும் மேற்பார்வையுடன் கூடிய களப்பணி போன்றவற்றை நடத்தும்.

8. சமூகப் பணிப்பாடம் என்பது பட்டப்படிப்பிலும் பட்ட மேற்படிப்பிலும் அளிக்கப்படும் சமூகப் பணியின் சான்றிதழ் படிப்பாகும்.

9. தகுதி சார் சமூகப் பணித்தகுதி என்பது பல்கலைக் கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியின் குறைந்தபட்ச பட்ட படிப்பு அல்லது பட்ட மேற்படிப்பு ஆகும்.

10. "களப்பணி" என்பது சமூகப்பணிக் கல்வித்திட்டத்தின் முக்கிய அங்கமாகும். இது சமுதாய களத்தில் மாணவர்களை வைத்து சமூகப் பணிக்கான பயிற்சியை மேற்பார்வையுடன் அளிக்கப்படும் பயிற்சியாகும்.

11. தகுதிசார் சமூகப்பணியாளர் என்றால் சமூகப்பணி தகுதி பெற்ற ஒரு நபர் (இப்பகுதியில் 9வது விளக்கத்தின்படி)

12. "சமூகப்பணி கற்பிப்போர் என்றால் கற்பித்தல், களப்பணி போதித்தல், ஆய்வுகளை வழிநடத்துதல் மற்றும் சமூகப்பணிக் கல்வி தொடர்பான எந்த ஒரு பணியிலும் ஈடுபட்டிருக்கும் தகுதிசார் சமூகப்பணியாளர்.

13. தகுதிசார் சமூகப்பணியாளர் என்றால் (இவ்வத்தியாயத்தின் விளக்கம் 11ன்படி) தனது வேலை, தனிப்பட்ட தொழில் அல்லது அறிவுரை மூலமாக அடித்தள மக்களின் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர் மற்றும் அமைப்பின் நிர்வாகம், ஆராய்ச்சி அம்மக்களுக்கான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்பவர்.

14. "தகுதிசார் சமூகப்பணியாளர் கூட்டமைப்பு" என்றால் நகரம், மாநிலம், நாடு மற்றும் உலகளவிலான தகுதிசார் சமூகப்பணியாளர்கள் (இந்த அத்தியாயத்தின் விளக்கம் 11ன்படி) அல்லது சமூகப்பணி கற்பிப்பாளர்கள் (இந்த அத்தியாயத்தின் விளக்கம் 12ன்படி) தன்னார்வ மற்றும் பதிவு செய்யப்பட்ட கூட்டமைப்பு அல்லது சமூகப்பணி கல்வித்திட்டங்கள் (இந்த அத்தியாயத்தின் விளக்கம் 7ன்படி)

15. "குடிமக்கள் சங்க அமைப்புகள்" என்பது தன்னார்வ , நிறுவன மற்றும் தன்னார்வ (உலகளவிலான, நாட்டளவிளான , உள்ளூர்) அமைப்புகள், சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள், மக்கள் தொடர்பான சமுதாய உணர்வுடனான சமுதாய இயக்கங்கள் மற்றும் செயற்குழுக்களை உள்ளடக்கியதாகும்.

16. "செயல்படுத்தும் துறை" எனப்படுவது யாதெனில் இக்குழுமத்தினை செயல்படுத்தும் தமிழக அரசின் துறை ஆகும்.

17. "விதிமுறை" எனப்படுவது யாதெனில் இச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் கோட்பாடுகள் ஆகும்.

18. "சட்டம்" எனப்படுவது யாதெனில் இவ்வரைவு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகள் ஆகும்.

19. "கட்டுப்பாடு" எனப்படுவது யாதெனில் இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் ஆகும்.

20. "அங்கீகரிக்ப்பட்ட  திட்டம் எனப்படுவது யாதெனில் இச்சடத்தின் படி, குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி கல்வித்திட்டம் ஆகும்.

21. "அங்கீகரிக்ப்பட்ட கல்வித்திட்டம்" எனப்படுவது யாதெனில் இச்சட்டத்தின்படி, குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக நல பாடத்திட்டம் ஆகும்.

22. "பதிவு செய்த தகுதிசார் சமூகப்பணி கல்வியாளர் அல்லது தொழில் செய்பவர் என்பவர் எவரெனில் குழுமத்தில் பதிவு செய்துள்ள சமூகப்பணி கல்வியாளர் அல்லது சமூகப்பணியினை தொழிலாக செய்பவர் ஆவர்.

23. "பதிவேடுகள்" எனப்படுவது யாதெனில் இச்சட்டத்தின்படி குழுமத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் சமூகப்பணி கல்வித்திட்டம், பாடத்திட்டம் மற்றும் தகுதி சார் சமூகப்பணியாளர் தொடர்பான மாநிலப்பதிவேடுகள் ஆகும்.

24. "இசைவு" எனப்படுவது யாதெனில் சமூகப்பணி திட்டங்கள் பாடத்திட்டங்கள் மற்றும் களப்பணிகளை கற்றுக்கொடுக்க, நிர்வகிக்கத் தேவையான நிர்வாக ஒப்புதல் வழங்கிடும் சட்டபூர்வமான அங்கீகாரம் ஆகும்.

## அத்தியாயம் - II

## குழுமத்தை ஏற்படுத்துதல்

**பிரிவு - 3**

**குழுமத்தை அமைத்தல்**

**A) குழுமத்தினை அமைத்தல்**

1. தமிழ்நாடு அரசு குறிப்பிட்ட ஒரு நாளிலிருந்து இச்சட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக, இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி தமிழ்நாடு தகுதி சார் சமூகப்பணிக் கல்வி மற்றும் செயல்பாடுக்குழுமம் என்றழைக்கப்படும் குழுமம் ஒன்றை அமைத்திடும்.

2. மேற்காணும் பெயர் கொண்ட இக்குழுமம் ஓர் பொது நிறுவனமாகவும், தொடர்நிலை கொண்டதாகவும், இச்சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு குழுமத்தின் செயல்பாடுகளை செயல்படுத்த ஏதுவாக அசையும் மற்றும் அசையாச்சொத்துக்களை கையகப்படுத்த வாடகைக்கு எடுத்திட மற்றும் அவற்றை விற்றிடத் தேவையான அதிகாரமும் பொது முத்திரையும் வழங்கிடும்.

3. தமிழ்நாடு அரசு உரிய அரசாணை மூலம் இச்சட்டத்தின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்திடத் தேவையான வழிமுறைகளை உருவாக்கிடும்.

4. இக்குழுமம் தமிழ்நாடு அரசின் முன் அனுமதியோடும் மற்றும் அரசாணை வெளியிடப்பட்ட பின்னர் இச்சட்டத்திற்கு இணங்க உரிய கோட்பாடுகளை வகுத்திடும்.

## B. தெரிவுக்குழுவினை அமைத்தல்

1. இக்குழுமத்தின் உறுப்பினர்களை தெரிவு செய்திட ஓர் தெரிவுக்குழுவினை தமிழ்நாடு அரசின் செயல்படுத்தும் துறை அமைத்திடும்.

2. இத் தெரிவுக்குழு தலைவர், உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொண்ட குழுமத்தினை தெரிவு செய்து, ஏற்புக்காக உறுப்பினர் விவரங்களை செயல்படுத்தும் துறைக்கு அனுப்பி வைக்கும்.

3. தெரிவுக் குழு பின்வரும் உறுப்பினர்களை தன்னகத்தே கொண்டிருக்கும்.

    ❖ தமிழகம் தவிர்த்த இதர மாநிலத்தின் தேசிய அங்கீகாரம் பெற்ற கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தின் சமூக நல கல்வித்திட்டத்தின் முன்னாள் தலைவர் அல்லது இன்னாள் தலைவர்.

    ❖ பல்கலைக்கழக மானியக் குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட ஓர் உறுப்பினர்.

❖ செயலர் நிலைக்கு கீழ் இல்லாமல் இருக்கும் செயல்படுத்தும் துறையின் பிரதிநிதி.

C. அலுவலக உறுப்பினர்கள் நியமனம்

❖ துணை வேந்தர் நிலையில் உள்ளவர் இக்குழுமத்தின் முழுநேர மற்றும் ஊதியம் பெறும் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

❖ இணை வேந்தர் நிலையில் உள்ளவர் இக்குழுமத்தின் முழுநேர மற்றும் ஊதியம் பெறும் உப தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

❖ அனுபவமிக்க சமூக நல கல்வியாளர்கள் இக்குழுமத்தின் கௌரவ உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.

**d. தலைவர் மற்றும் உபதலைவருக்கான கல்வித்தகுதிகள்**

1. சமூகநலத்தில் முதுகலை பட்டம், முனைவர் பட்டம் அல்லது ஆய்வுகள் பிரசுரிப்பு அல்லது சமூக பணியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாற்றியமை.

2. சமூக பணியில் முதுகலைக் கல்வியுடன் தமிழகத்தின் தேசிய அங்கீகாரம் பெற்ற ஓர் கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தின் தலைசிறந்த தற்போதைய அல்லது முன்னாள் தலைவர்.

3. மாநில அல்லது மத்திய அரசின் அதிகாரியாய் இருத்தல் கூடாது.

**கடமைகள் :**

❖ தலைவர்

குழுமத்தின் தலைவராக செயல்படுவார்

வல்லுனர் சபை மற்றும் குழுக்களிலும் உறுப்பினராய் செயல்படுவார்.

## உபதலைவர்

❖ தலைவரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுதல் தலைவர் இல்லாத போது தலைவருக்குரிய கடமைகளைச் மேற்கொள்ளுதல். மன்றம் தனது தேவைக்கேற்ப பொதுவான அல்லது சிறப்பான ஆணை மூலமாக தலைவருக்கோ அல்லது உறுப்பினருக்கோ அல்லது அலுவலர்களுக்கோ கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டு உரிய அதிகாரத்தையும், கடமைகளையும் நிறைவேற்ற உரிய ஆணையை வழங்கிடலாம்.

## e. மன்றத்தின் கௌரவ உறுப்பினர்கள்

❖ இம்மன்றத்தின் கௌரவ உறுப்பினர்கள் பின் வரும் நபர்களைக்கொண்டதாக விளங்கும்.

❖ அங்கீகரிக்கப்பட்ட சமூக நலக் கல்வித்திட்டத்தில் குறைந்தபட்சம் முதுகலைப் பட்டம் பெற்ற (முனைவர் பட்டம் பெற்றவர்களாயின் நன்று) ஏழு சமூக நல கல்வியாளர்கள்.

❖ தமிழ்நாட்டின் பல பிராந்தியங்களில் இருந்து சுழற்சி முறையில் சமூகப்பணிக்கல்வியில் முதுகலைப்பட்டம் பெற்ற நான்கு, சமூகப்பணியாளர்கள் பரிந்துறை செய்யப்படுவார்கள்.

1. தமிழக அரசின் உயர்கல்வித்துறை மற்றும் செயல்படுத்தும் துறையிலிருந்து செயலர் பதவிக்குக் குறையாத இரு உறுப்பினர்கள்.

2. தமிழக அரசின் சமூக நீதி மகளிர் மற்றும் குழந்தை வளர்ச்சி, தொழிலாளர், ஊரக வளர்ச்சி, இளைஞர் மற்றும் மக்கள் நல்வாழ்வு ஆகிய துறைகளிலிருந்து சுழற்சி முறையில், செயலாளர் பதவிக்குக் குறையாத மூன்று உறுப்பினர்கள்.

3. மன்றத்திற்கு உதவிடவும், ஆலோசனை வழங்கவும் தகுதியானவர்கள் என குழுமத்தினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

4. தமிழ்நாட்டின் நகரம் அல்லது மாநில அளவில் இயங்கிவரும் தகுதிசார் சமூக நலப்பணியாளர் சங்கத்திலிருந்து சுழற்சி முறையில் இரு அழைப்பாளிகள்.

மேற்குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களில் 50% நபர்கள் மகளிராகவும் சமூக நல தொழில் புரிபவர்களாயிருத்தல் வேண்டும்.

பிரிவு – 4

**a) மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் :**

1. ஐந்து ஆண்டு காலத்திற்கோ அல்லது 70வயது நிரம்பும் வரையிலோ அல்லது இவற்றுள் எத்தகுதியை முன்னர் அடைகிறாரோ அதுவரை தலைவர் தனது பதவியில் நீடிப்பார்.

2. ஐந்து ஆண்டு காலத்திற்கோ அல்லது 65வயது நிரம்பும் வரையிலா அல்லது இவற்றுள் எத்தகுதியை முன்னர் அடைகிறாரோ அதுவரை துணைத்தலைவர் தனது பதவியில் நீடிப்பார்.

3. மூன்று ஆண்டு காலத்திற்கோ அல்லது 65வயது நிரம்பும் வரையிலோ அல்லது முன்னாள் அலுவலர்கள் பதவியில் நியமிக்கப்பட்டால் அவர்கள் பதவியில் நீடிக்கும் வரை கௌரவ உறுப்பினர்கள் பதவியில் நீடிப்பார்.

**b) மன்றத்தில் ஊதியம் பெறா உறுப்பினர்கள்**

❖ மன்றத்தில் ஊதியம் பெறா உறுப்பினர்கள் அவர்கள் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலம் பதவி வகிப்பார். அவர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் ஒவ்வொரு ஆண்டும் அப்பதவியினின்று ஓய்வு பெறுவர். அவர்கள் அவ்வாறு இரண்டு முறைக்கு மேல் நியமிக்கப்படமாட்டார்கள். (தொடர் தன்மையைக் கருதி மன்றத்தின் முதல் மூன்றில் ஒரு பங்கினர், முதலாண்டின்

இறுதியிலும, இரண்டாவது மூன்றில் ஒரு பங்கினர் இரண்டாமாண்டின் இறுதியிலும் ஓய்வு பெறுவர். மன்ற கூட்டத்தில் குறைந்த எண்ணிக்கையில் பங்கேற்றவர்கள் முதலில் ஓய்வு, பெற கேட்டுக்கொள்ளப்படுவர். முதல் இரண்டாண்டுகளில் ஓய்வு எவர் பெறுவர் என்பது குறித்த முடிவெடுத்திட மன்றம் உரிய வழிமுறையை கையாளும்.

**c) மறு நியமனம்**

❖ உறுப்பினராக பணிபுரிந்த எந்தவொரு நபரும், தலைவர் உபதலைவர் அல்லது உறுப்பினராக மேலும் தொடர்ந்து ஒரு பணிபுரிக்காலத்திற்கு நியமிக்கப்பட தகுதியுடையவராவர்.

❖ துணைத்தலைமையராக பொறுப்பு வகித்த நபர் தலைவராக மறு நியமனம் செய்திட தகுதியுடையவராவார்.

**d) காலியிடம் நிரப்புதல் :**

மன்றத்தின் தற்காலிக காலியிடம்,பிரிவு 3ன் கட்டுப்பாட்டு விதிக்கொப்ப நிரப்பப்படும் அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர், எவருக்கு பதிலாக நியமிக்கப்பட்டாரோ, அவரின் எஞ்சிய பணிக்காலம் வரை மட்டுமே பதவியில் நீடிக்க தகுதியுடையவராவர்.

**பிரிவு : 5:**

**தகுதியின்மை**

**பின்வரும் நபர் எவரும் மன்றத்தின் உறுப்பினராக செயல்பட இயலாது**

❖ ஏதாவது ஒர் குற்றத்திற்காக தண்டனை பெற்று மேலும் அச்செயல் ஒழுக்கக்கேடானது என தமிழ்நாடு அரசோ அல்லது மன்றமோ அதனைக் கருதும் பட்சத்தில்.

- ❖ அரசுப்பணியினின்றோ அல்லது அரசிற்கு சொந்தமான அல்லது கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டமைப்பிலிருந்தோ பணிநீக்கம் அல்லது பணியறவு செய்யப்பட்டவர்கள்.

- ❖ உறுப்பினருக்குரிய பணியை நீதிக்குட்பட்டு செயல்பட இயலாதென மன்றத்திற்குரிய நிதிசார்ந்த மற்றும் இதர பற்றுகளை உறுப்பினரால் நீதிக்குட்பட்டு செயல்பட இயலாது என தமிழக அரசால் கருதப்படுமேயாயின்.

பிரிவு : 6

**உறுப்பினர் தனது பணியினின்று விடுபடுதல்**

**பின்வரும் எந்த உறுப்பினரையும் தமிழக அரசு பணிநீக்கம் செய்திடலாம்.**

a. பிரிவு – 5-ல் குறிப்பிடப்பட்ட தகுதியின்மையை எவரேனும் அடைய நேரிட்டால் அல்லது.
b. ஊரிய அனுமதியின்றி மன்றத்தின் மூன்று அமர்வுகளுக்கு தொடர்ந்து பங்கேற்காதவர்கள் அல்லது
c. பதிவு பெற்ற தகுதி சார் சமூக நல பணியாளராக நீடிக்காதவர்

பிரிவு : 7

**ஊதியம் மற்றும் இதர படிகள்**

**மன்றம் தமிழக அரசின் ஒப்புதலுடன் பின்வரும் அலுவலர்களுக்கு உரிய ஊதியத்தை நிர்ணயிக்கும்.**

- ❖ தலைவர்,துணைத்தலைவர் மற்றும் செயலர் ஆகியோரின் படிகள் மற்றும் முழுநேர அலுவலர்களின் ஊதியம் மற்றும் பணிமுறை விதிகள் ஆகியவற்றை பல்கலைக்கழக மானியக் குழுவின் நெறிமுறைகளுக்குட்பட்டு தீர்மானிக்கும்.

❖ மன்ற உறுப்பினர்கள் மற்றும் வல்லுநர்கள் மன்ற அமர்வுகளுக்கு பங்கேற்றிடும் நாட்களில் அவர்களுக்குரிய மதிப்பூதியம் மற்றும் பயணப்படியை வழங்குதல் மற்றும் இதர இனங்கள் சம்பந்தமான முடிவுகளை மேற்கொள்ளும்.

❖ மன்றம் அல்லது ஏதாவதுதொரு குழுவின் அமைப்பில் குறைகள் ஏதேனும் காணப்படினோ அல்லது காலியிடம் ஏற்படினோ மன்றம் அல்லது அத்தகையை குழுவின் செயல்கள் அல்லது செயல்முறை ஆணைகள் வாதத்திற்குட்படுத்தப்படக்கூடாது.

பிரிவு : 8

அமர்வுகள்

1. உரிய நடைமுறைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி தனது அலுவல்களை நிறைவேற்றுவிதமான குறிப்பிட்ட நேரத்திலும், குறிப்பிட்ட இடத்திலும் குறைந்தபட்சம் நான்கு முறையாவது மன்றத்தின் அமர்வுகள் இருந்திடும்.

2. மன்றத்தின் அமர்வுகள் தலைவர் தலைமையிலும் அவர் பற்கேற்க இயலாத சமயங்களில் துணைத்தலைவர் தலைமையிலும் நடைபெறும்.

3. தலைவரோ அல்லது துணைத்தலைவரோ மன்றத்தின் அமர்வில் பங்கேற்க இயலாத சமயத்தில், பிரிவு 5ன் கூறு பி மற்றும் உப கூறு 1ன் படி அமர்வில் பங்கேற்றுள்ள உறுப்பினர்களில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் தற்காலிக தலைவராக பொறுப்பேற்று அமர்வினை முன்னெடுத்துச் செல்வார்.

4. குழுமத்தின் அமர்வின் முன்னர் எந்த கேள்வி எழுந்தாலும் அதற்கு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்தே ஏற்றுக்கொள்ளப்படும் உறுப்பினர்கள் சமமாக இருபுறமும் இருந்தால், குழுவின் தலைவரோ அல்லது தலைவர் இல்லாத

பட்சத்தில் குழுவை நடத்துபவரோ தனது கருத்தை இரண்டாவது முறையாக பயன்படுத்துவார்.

முழுநேரப்பணிப் பணியாளர்களை நியமிப்பது

குமுமம் சார்பாக எடுக்கப்படும் ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு, இக்குழு முழுநேர ஊதியம் பெறும் பணியாளர்களை நியமிக்கும்.

## a. குழுமத்தின் செயலாளர்

1. சேயலாளர் சமுகப்பணியில் பேராசிரியர் அல்லது இணைப்பேராசிரியர் என்ற தகுதிக்கு இணையாக இருக்க வேண்டும்.

2. செயாளர் 5வருடங்களோ அல்லது 65 வயது முடியும் வரையிலோ அல்லது இவற்றுள் எத்தகுதியை முதலில் அடைகிறாரோ அதுவரை பணியில் இருப்பார். குழுவின் முடிவிற்கேற்ப அவர் திரும்பவும் நியமிக்கப்படலாம்.

3. நிர்வாகப்பணியாளர்களின் தலைவராக செயலாளர் செயல்படுவார்.

4. செயலாளர் குழுவின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப பணியாற்றுவார். மேலும் அவ்வப்போது தலைவர் இடும் பணிகளையும் ஆற்றுவார்.

5. செயலாளர்

a) குழுவின் சார்பாக, ஒப்பந்தங்களில் கையெழுத்திடுதல் போன்ற சட்ட சம்பந்தமான விஷயங்களில் செயலாளரே இருப்பார் மேலும் வழக்கு தொடரவும் , வழக்கு தொடரப்படவும் செயலாளருக்கே உரிமையுண்டு. கொள்கைகள், திட்டங்கள் போன்றவற்றின் தொடர்பாக குழுமம் எடுக்கும் முடிவுகளை செயல்படுத்துவார். நடைமுறைகள் சம்பந்தமாக குழு கூட்டங்களின் பதிவேடுகளையும், கூட்டத்தின் நிகழ்வுகளையும், எழுதும் கடமை உண்டு.

b. குறைந்த பட்சம் 4 சமூகப்பணியாளர்களை, குழுவின் பணிகளை நிறைவேற்றிட நியமத்திடும்.
c. நிதி அலுவலர் (1)
d. கணக்காளர் (1)
e. விவரங்களுக்கான மேலாளர் (1)
f. விவரங்களை சேகரிப்பவர் (2)
g. நிர்வாக உதவியாளர் (1)
h. தேவைப்படும் போது தற்காலிக பணியாளர்களை நியமித்திடவோ அல்லது அப்பணிகளை வெளியாட்களைக் கொண்டோ நிறைவேற்றிக்கொள்ளலாம்.

பகுதி III

குழுமத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் சமூகப்பணிக் கல்வியினை ஏற்படுத்தல், அதனை பராமரித்தல், சமூகப்பணிக் கல்வியையும் அதன் தரத்தினையும் ஒழுங்குபடுத்துதல், களப்பணிகளை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இக்குழுவின் பணிகளாகும்.

பிரிவு - 10

கல்விப்பணிகள்

குழுமம் கீழ்கண்ட கல்விப்பணிகளை நிறைவேற்றும்

a) சமூகப்பணிக் கல்விக்கு குறைந்த பட்ச தரத்தையும், மாதிரி பாடத்திட்டத்தினையும் தயாரித்தளிப்பதுடன் அப்பாடத்திட்டத்தினை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்விற்கு உட்படுத்தும்.

b) சமூகப்பணியில் குறிப்பிட்ட ஒரு பட்டத்தை வழங்க பல்கலைக்கழக மானியக்குழுவிற்கு UGCக்கு ஆலோசனை வழங்கும் இது UGC பல்கலைக்

கழக மானியக்குழுச் சட்டம் 1956 பிரிவு 22 (3) ன் நோக்கங்களுக்காக செய்யப்படும்.

c) தமிழ்நாட்டில் சமூகப்பணித்திட்டங்களையும் கல்வியையும் அங்கிகரிப்பதன் மூலம் சமுகப்பணி கல்வியை ஒழுங்குமுறை படுத்தும், மேலும் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மறு அங்கீகாரத்தையும் அளித்திடும்.

d) சமூகப்பணிக் கல்வியின் தரத்தை உயர்த்தி 5 வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யும்.

e) சமூகப்பணி கல்விக்கான தரத்தை மேம்படுத்தவதுடன், அவற்றை ஒருமுறை மறு ஆய்விற்கு உட்படுத்தும்.

f) தமிழ்நாட்டிலுள்ள பல் துறைகளில், பல நிலைகளில் மனிதவளங்களின் தேவைகளை திட்டமிட்டு வரைபடம் உருவாக்குதல்

g) தமிழக அரசுக்கும், பல்கலைகழகங்களுக்கும்,தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும், மற்ற மாநிலங்களுக்கும் பிற நாடுகளுக்கும் ஆலோசனையும், பரிந்துரையும் வழங்குதல்.

h) சமூகப்பணிக் கல்வி மற்றும் பயிற்சியின் தரத்தை பராமரிக்கத் தகுந்த கல்விப் பணிகளை இக்குழு நடைமுறைப்படுத்தும்.

பிரிவு - 11

நிர்வாகப்பணிகள்

இக்குழுமம், மசோதாவின் வழிவகைகளில் குறிப்பிட்டுள்ள மேற்காணும் கல்விப்பணிகளை நடத்த கீழ்க்கண்ட நிர்வாகப்பணிகளை மேற்கொள்ளும்.

a. குழுமம் செயல்பட தேவைப்படும் விதிகளையும், ஒழுங்கு முறைகளையும் இயற்றும்.

b. ஆண்டு மற்றும் ஐந்தாண்டு திட்டங்களையும் வரவு செலவுகளை தயாரிப்பது, அனுமதிப்பது மற்றும் மறு ஆய்வு செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளும்.

c. குழுவின் வரவு செலவுகளையும், நீதி சம்பந்தமான முடிவெடுத்தலையும் தீர்மானிக்கும்.

d. வலைத்தளம் வாயிலாக தகுந்த ஆவணங்களை வெளியிடுதல் மற்றும் பரப்புதல் மற்றும் தேவைக்கு ஏற்றாற்போல் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அல்லது இதர மொழிகளிலோ அச்சிடுதல்.

e. தேவைக்கேற்றாற் போல் தமிழக அரசுத்துறைகளுடனும் மற்றும் மத்திய அரசின் அனைத்து துறைகளுடனும் தேவையான உறவு முறைகளை ஏற்படுத்திக் கொண்டு இணக்கமான முறையில் பணிபுரியும்.

பிரிவு - 12

தரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்கு படுத்துதல்

a. தமிழ்நாட்டில், சமூகப்பணிகல்வி மற்றும் படிப்பின் தரத்தை மேம்படுத்தி ஒழுங்குபடுத்தும்.

b. 5 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் பதிவு மற்றும் மறுப்பதிவின் மூலம் தகுதி சார் சமூகப்பணியாளர்களின் கல்வித் தகுதியையும் மற்றும் ஒழுக்கக் கொள்கைளையும் இக்குழுமம் நெறிமுறைப்படுத்தும்.

c. சுமூகப்பணிக் கல்வித்திட்டங்கள், பாடங்கள், சமூகப்பணி கற்பிப்போர்கள், நடைமுறைப்படுத்துவோர்கள் போன்றவர்களின் தரத்தை மேம்படுத்தவும் ஒழுங்கு முறைப்படுத்தவும் தேவையான விதிகளை இக்குமுமம் இயற்றிடும்.

பிரிவு - 13

**தகுதிகள் சமூகப்பணியாளர்களின் பதிவு**

தகுதிசார் சமூகப்பணியாளர்கள், கற்பிப்போர் மற்றும் நடைமுறைபடுத்துவோர் ஆகியோரின் பதிவு, பதிவு நீக்குதல் ஆகியவற்றிற்கான செயல்முறைகளை இக்குழுமம் உருவாக்கிடும்.

தகுதி சார் சமூகப்பணியாளர்களின் ஒழுக்கவியல் நெறிமுறைகள், தகுதி சார் சமூகக் பணிக்கல்வி கற்பிப்போருக்கும் நடைமுறையாளர்களுக்கும் பொருந்தும்.

பரிவு – 14

**சமூகப்பணியாளர்களின் மனக்குறைகளை போக்குதல் மற்றும் பதிலை நீக்குதல்**

a. சமூகப்பணியாளர்களின் குறைகளை களைவதற்கான விதிகள் வகுக்கப்படும். மனக்குறைகள் தொடர்பான விண்ணப்பங்களை பெறுதல் மற்றும் அவற்றைக் களைதல் தொடர்பான விதிமுறைகளை வகுத்து, குழுமத்தின் இறுதி முடிவுக்குத் தேவையான அறிக்கையை சமர்ப்பிக்கும்.

b. தகுதி சார் சமூகப்பணியாளர் கல்வித்தகுதியிலோ அல்லது ஒழுக்க முறையிலோ அத்துமீறல் காணப்பட்டால் அத்தகையோரின் செய்வதற்கான இது அதிகாரத்தினை குமுமம் பெற்றிருக்கும் மற்றும் மேல்முறையீடு ஆகியவை விதிகளில் இடம் பெறும்.

பிரிவு – 15

**நெறிமுறைப்படுத்தப்படாத வளர்ச்சிப் பணிகள்**

a. பட்டப்படிப்புக்குக் கீழுள்ள உயர்நிலைப்பள்ளி, சான்றிதழ் மற்றும் பட்டயப்படிப்பு போன்றவற்றிற்கு கீழே கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை

மேம்படுத்தத் தேவையான முயற்சிகளை குழுமம் மேற்கொள்ளும் பல்வேறு நிலைகளில் துணைநிலை தகுதிசார் சமூகப்பணியாளர்கள் உருவாக்கப்பட அவர்களுக்குரிய அடிப்படை தேவைகளை குழுமம் நிாண்யிக்கும்.

b. குழுமம், பட்டப்படிப்பிற்கு இணையாகவோ மற்றும் முதுகலைப்படிப்பிற்கு இணையாகவோ, சான்றிதழ் படிப்புகளை உருவாக்கிடும். இது பல பிரிவு மக்களுக்கானதாக இருக்கும்.

பிரிவு – 16

a) சமூகப்பணியில் மனிதவளங்களை உறுவாக்கிட பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

b) மாநிலத்தின் பலத்துறைகளில், பல நிலைகளில் சமூகப்பணியாளர்களின் தேவைகள் குறித்த ஆய்வினை மேற்கொள்ளும்.

c) தகுதிசார் சமூகப்பணியாளர்கள் மட்டுமே பணிபுரியக்கூடிய பதவிகளை இனம் காணும் மற்றும் சமூகப்பணியும் ஒரு முக்கிய தகுதியாக இருந்திட வேண்டிய பணி இடங்களையும் தெரிவு செய்யும்.

d) பொதுப்பணி வேலைகளில், மாவட்டம், மாநிலம், உள்ளூர் பஞ்சாயத்து, நகர நிர்வாகம் ஆகியவற்றின் அரசுப்பணிகளில் சமூகப்பணியாளரைக் கொண்டு நியமிக்கப்பட வேண்டிய பணியிடங்களை தெரிவு செய்யும்.

e) தனியார் துறைகளில், உரிய குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, சமூகப்பணியாளர்களுக்கென தெரிவு செய்யப்பட்ட பதவிகளில், தகுதிசார் சமூகப்பணி தகுதி படைத்தவர்கள்தான் நியமனம் செய்ய வேண்டும் என்பதை உறுதி செய்தல்.

f) பல துறைகளில், பல நிலைகளில் உள்ள தகுதிசார் சமூகப்பணியாளர்களின் தேவைக்கு ஏற்றவாறு சமூகப்பணிக் கல்வித்திட்டத்தை பரிந்துரை செய்தல்.

g) பயிற்சி திட்டங்களை நடத்துதல் அல்லது வெளியாட்களைக் கொண்டு திட்டங்களை மேற்கொள்ளுதல்.

h) அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும், அரசு அல்லாத நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

பிரிவு – 17

**புள்ளி விவரங்களை நிர்வகித்தல் மற்றும் பரப்புதல்**

கீழ்காணும் இனங்கள் குறித்த விவரங்களை தொகுத்தல், பரமரித்தல், பிரசுரித்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றை வலைத்தளம் மூலமாகவோ, அல்லது தமிழ், அங்கிலம் அல்லது இதர மொழிகளிலோ உரிய அச்சு ஊடகங்கள் மூலமாக குழுமம் வெளியிடும்.

- ❖ சமூகப்பணிக் கல்வித்திட்டத்தின் தரம்
- ❖ பட்டப்படிப்பிற்கான மாதிரி பாடத்திட்டம் (இளங்கலை மற்றும் முதுகலை)
- ❖ மசோதா சம்பந்தப்பட்ட அனைத்து ஒழுங்குமுறை
- ❖ பதிவு செய்யப்பட்ட சமூகப்பணி கல்வி திட்டங்கள் மற்றும் படிப்பின் விவரங்கள்
- ❖ சமூகப்பணியாளர்கள் பதிவு குறித்த நடைமுறைகள்
- ❖ குழுமத்திற்கு தேவைப்படும் ஆவணங்கள் மற்றும் தகுந்த விவரங்கள்
- ❖ பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு நீக்கம் செய்யப்பட்ட சமூகப்பணி கல்வித்திட்ட மற்றும் படிப்பின் விவரங்கள் குறித்த பதிவேடு.
- ❖ சமூகப்பணியாளர்களுக்கான ஒழுங்குமுறைகள
- ❖ பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு நீக்கம் செய்யப்பட்ட தகுதிசார் சமூகப்பணியாளர்களின் பட்டியல்

பிரிவு - 18

## தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுதல்

தமிழகம் மற்றும் இந்தியாவின் இதர மாநிலங்கள் மற்றும் இதர நாடுகளில் உள்ள அரசு கல்வி நிலையங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு பின்வரும் இனங்களுக்கு, நிறுவனங்களுக்கு, ஆலோசனையும், பரிந்துறையும் வழங்கிடும்.

a. பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் தேசிய மதிப்பீடு மற்றும் சான்றளிப்புக்குழுமம்

b. தமிழக அரசின் கல்வித்துறை சமூகநீதி, நீதித்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடுத்துறை, தொழிலாளர் துறை, ஊரக வளர்ச்சித்துறை, இளைஞர் மற்றும் சுகாதாரம், குடும்ப நலத்துறை.

c. பிறமாநிலங்களிலும் ,பிற நாடுகளிலும் உள்ள தகுதிசார் சமூகப்பணி குமுமம் மற்றும் .

d. பிராந்திய தேசிய, சர்வதேச தகுதிசார் சமூகப்பணிச்சங்கங்கள்.

பிரிவு - 19

## மசோதாவில் திருத்தங்கள் மற்றும் குழுமத்தை கலைத்தல்

1. குழுமத்தின் பணிகளுக்குத் தேவையான திருத்தங்கள், குறிப்பிட்ட காலங்களுக்கு ஒருமுறை தொடர் ஆய்வு செய்த பின்னர் மேற்கொள்ளப்படும்.

2. தேவையேற்பட்டால் குழுமத்தினை கலைத்து விட தமிழக அரசிற்கு பரிந்துறை செய்யும்.

பகுதி - 4

## சமூகப்பணிக்கல்வித்திட்டங்களை அங்கீகரித்தல்

பரிவு - 20

சமூகப்பணிக்கல்வி திட்டங்களையும் படிப்பபையும் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரித்தல்.

1. சமூகப்பணி, படிப்பை அல்லது பயிற்சியை வழங்கும் அல்லது வழங்க முனையும் ஒவ்வொரு கல்வி நிறுவனத்திற்கும், இக்குழுமம் நிர்ணயிக்கும் நாளிலோ அல்லது அதன் பின்னரோ இம்மசோதாவின் கீழ் அங்கீகாரம் கிடைக்க உரிய விண்ணப்பப்படிவத்தில் மற்றும் விதிமுறைகளின் படி குழுமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இக்குழுமம் நியமிக்கப்படுவதற்கு முன்னரே சமூகப்பணிக்கல்வியையும், பயிற்சியையும் அளித்துவரும் மேயாவின் அந்நிறுவனம், குழுமம் நிர்ணயித்த காலத்திற்குள் உரிய விண்ணப்பத்தை சமர்ப்பித்திருப்பின் அத்தகு கல்வியையோ அல்லது பயிற்சியையோ 6 மாத காலத்திற்கோ அல்லது அவ்விண்ணப்பத்தின் மீதான முடிவை எடுக்கும் வரையோ தொடரலாம்.

2. துணைப்பிரிவு (1)ல் குறிப்பிட்ட படி விண்ணப்பத்துடன் உரிய கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

3. துணைப்பிரிவு (1) ல் குறிப்பிட்டவாறு விண்ணப்பப்படிவத்தை கல்வி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட பின்னர் தேவையான இதர விவரங்களை சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அவை

a). விண்ணப்பித்துள்ள கல்வி நிறுவனத்தில் போதுமான அளவு நிதி வளம், தங்குமிடம், நூலகம், தகுதி பெற்ற ஆசிரியர்கள், ஆய்வுக்கூடம் மற்றும் விதிமுறைகளின் கூறியுள்ளது போன்று சமூகப்பணி கல்வியையும்

பயிற்சிகளையும் முறையாக நடத்த தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றிருந்தால், அந்நிறுவனத்திற்கு அங்கீகாரம் அளித்து ஆணை பிறப்பிக்கும்.

b). துணை பிரிவு (a). ல் குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிட்ட அக்கல்வி நிறுவனம் தேவையான வசதிகளை கொண்டிருக்கவில்லை என்று குழுமம் கருதினால் அங்கீகாரத்தை மறுத்து ஆணை பிறப்பிக்கும் அதற்கான காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்யும் துணை விதி (b). யில் குறியிட்டுள்ளவாறு அங்கீகாரத்தை மறுத்து ஆணை பிறப்பிப்பதற்கு முன்னால், குழுமம் அக்கல்வி நிறுவனத்திற்கு உரிய பதில் எழுத்துமூலமாக அளிப்பதற்கான வாய்ப்பினையும், சந்தர்ப்பத்தையும் வழங்கிடும்.

4. துணைப்பிரிவு (3) இல் குறிப்பிட்டுள்ளபடி சமூகப்பணி கல்வியும் பயிற்சியும் அளிக்கும் நிறுவனத்திற்கு குழுமம் அளிக்கும் ஒவ்வொரு அங்கீகார ஆணையும் அல்லது அங்கீகாரத்தை மறுக்கும் ஆணையும் அரசிதழில் வெளிடுவதோடு அந்த நிறுவனத்திற்கும் எழுத்து மூலமாக உரிய நடவடிக்கையை மேற்கொள்ள அனுப்பப்படும் மேலும் இந்த எழுத்துப்பூர்வமான அங்கீகாரம் மேலாய்வு அமைப்பு, உள்ளூர் நிர்வாகம் அல்லது மாநில மற்றும் மத்திய அரசு போன்றவற்றிற்கு அனுப்பிவைக்கப்படும்.

5. துணைபிரிவு (3) விதி (b). ல் குறிப்பிட்டுள்ளது போன்று அங்கீகாரம் மறுக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் ஆணை பிறப்பித்த நாளுக்கு பின்னர், அக் கல்வியாண்டு முடியும் வரை நடத்தலாம். ஆனால் அங்கீகாரம் மறுக்கப்பட்ட பின்னர். அந்த கல்வி ஆண்டு முடிந்த நாளில் இருந்து சமூகப்பணிக் கல்வி மற்றும் பயிற்சியை நிறுத்திவிட வேண்டும்.

6. ஒவ்வொரு மேலாய்வு அமைப்பும் துணைப்பிரிவு (4) இல் குறிப்பிட்டுள்ளது போன்று ஆணை பெற்றவுடன்

(a). அங்கீகாரம் அளிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திற்கு இணைப்பு அனுமதி வழங்கும்.

(b). அங்கீகாரம் மறுக்கப்பட்ட கல்வி நிவுனத்திற்கான இணைப்பினை நீக்கிவிடும்.

பிரிவு -21

<u>அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் புதிய பாடங்களையும், பயிற்சியினையும் துவக்க அனுமதித்தல்</u>

1. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் சமூகப்பணியில் வேறு புதிய படிப்பையோ அல்லது பயிற்சியையோ ஆரம்பிக்க வேண்டுமென்றால் விதிகளுக்குட்பட்டு இக்குழுமத்திற்கு விண்ணப்பித்த அனுமதி பெற வேண்டும்.

2. இணை பிரிவு (1) இல் குறிப்பிட்டுள்ளது போன்று விண்ணப்பத்தோடு அதற்குரிய கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

3. A Section 20 (a) (b) & (4) இங்கு Type செய்ய வேண்டும்.

பிரிவு - 22

<u>மசோதாவின் விதிகளை மீறுதல் மற்றும் அவ்விதி மீறல்களால் ஏற்படும் விளைவுகள்.</u>

1. குழுமம் சுயமாகவோ அல்லது தனி நபரிடமிருந்தோ அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி நிறுவனம், மசோதாவில் குறிப்பிட்டுள்ள, விதிமுறைகளுக்கோ, ஆணைகளுக்கோ மாறாக பிரிவு 20 ன் துணை பிரிவு (3) பிரிவு 21 ன் துணை பிரிவு (3) ல் அளித்துள்ள அடிப்படை தகுதிகளுக்கு முரணாக நடக்குமேயானால் குழுமம் அத்தகைய நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரத்தை ரத்து செய்து அதற்கான காரணங்களையும் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யும்.

அத்தகைய ரத்து செய்யும் ஆணையை, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு உரிய விளக்கம் அளித்திடப் போதுமான அவகாசத்தைக் கொடுக்காமல், பிறப்பிக்கப்படக்கூடாது. குழுமத்தால் பிறப்பிக்கப்படும் அத்தகைய ரத்து செய்யும் ஆணையோ, அங்கீகாரத்தை மறுக்கும் ஆணையோ, ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் உள்ள. கல்வியாண்டு முடியும் தேதியிலிருந்து தான் அமுலுக்கு வரும்.

2. அ) ஆணையின் நகல் துணைப்பிரிவு (1) ல் குறிப்பிட்டுள்ளவாறு சம்மந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கும், அதேசமயத்தில் பல்கலைக்கழக அல்லது தேர்வுக்குழுவிற்கும் அனுமதியையும் ரத்து செய்யும். பொருட்டு அனுப்பி வைக்கப்படும்.

ஆ) இவ்வாளை அரசிதழில் பொதுத்தகவலக்காக வெளியிடப்படும்.

3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் அங்கீகாரம் துணை பிரிவு (1) ன் படி இரத்து செய்யப்படுமேயாயின் அக்கல்வி நிறுவனம் சமூகப்பணிக்கல்வி மற்றும் பயிற்சி வழங்குதலை நிறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் சம்மந்தப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தேர்வுக் குழு தங்கள் அனுமதியை ரத்து செய்யும். இந்த ரத்தானது, ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதிக்கு பின்னர் வரும் கல்வியாண்டு முடியும் தேதியில் இருந்து செயல்பாட்டுக்கு வரும்.

4) சமூகப்பணிக் கல்வி நிறுவனம், அதற்கான அங்கீகாரத்தை குழுமம் விலக்கிக்கொண்ட பின்னரும் சமூகப்பணிக் கல்வியை தொடர்ந்து வழங்கினாலோ அல்லது குழுமம் நியமித்த நாளுக்கு முன்னர் அங்கீகாரத்தையோ அல்லது அனுமதியையோ, பெறத் தவறினால் அத்தகைய சமூகப்பணிக் கல்வி நிறுவனம் மூலம் பெறப்படும் கல்வி அல்லது பயிற்சி, முறையான கல்வியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்தகைய கல்வி மாநில அரசோ அல்லது மத்திய அரசோ அல்லது கல்லூரிகளாலோ பள்ளிகளாலோ அல்லது அரசு உதவி பெறும் இதர கல்வி நிறுவனங்களோ அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பிரிவு - 23

**மேல் முறையீடு**

1. மசோதாவின் பிரிவு 14, 20, 21 மற்றும் 22 ன் கீழ் பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபரும் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள், குழுமத்திற்கு மேல் முறையீடு செய்யலாம்.

2. குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் செய்யும் மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் மேல் முறையீடு செய்ய இயலாமைக்கான காரணங்கள் குழுமத்திற்கு திருப்தியளிக்க மேயாயின் மேல்முறையீடு, காலம் கடந்த பின்னரும் அனுமதிக்கப்படலாம்.

3. ஒவ்வொரு மேல்முறையீடும் குறிப்பிட்ட படிவத்தில் குழுமம் அளித்த ஆணையின் நகலோடும், மேல்முறையீட்டிற்கான உரிய கட்டணத்தொகையையும் செலுத்த வேண்டும்.

4. மேல் முறையீடு மசோதாவில் குறிப்பிட்டது போன்று நடைமுறைப்படுத்தப்படும் மேல் முறையீட்டின் அனுமதியை ஏற்க மறுப்பதற்கு முன்னால் விண்ணப்பதாரருக்கு, வழக்கு தொடர்பாக எடுத்துரைக்க போதிய அவகாசமும், வாய்ப்பும் அளிக்கப்படும்.

5. குழுமம் ஏற்கனவே அளித்த ஆணையை உறுதி செய்யும் அல்லது திரும்ப பெற்றுக்கொள்ளும்.

பகுதி - 5

**நிதி மற்றும் அறிக்கைகள் :**

பிரிவு - 24

**குழுமத்தின் நிதி மற்றும் வரவு செலவு :**

இக்குழுமம் தனக்கென சொந்தமாக நிதியினை வைத்திருக்கும் தமிழக அரசும், வேறு எந்த நிறுவனமும் அவ்வப்போது குழுமத்திற்கு மட்டும் தொகை மற்றும் ரசீது கொடுக்கும். அனைத்துத்தொகையும் குழுமத்தின் நிதியில் சேர்க்கப்படும்.

**a) தகுந்த கட்டணம் கீழ்கண்டவற்றிற்கு வசூலிக்கப்படும் ஐந்து**

1. ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை சமூகப்பணி கல்வி திட்டத்திற்கான அங்கீகாரம்.

2. ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை சமூகப்பணி பாடத்திற்கான அங்கீகாரம்.

3. ஐந்து வருடத்திற்கு ஒரு முறை சமூகப்பணியாளர்களை பதிவு செய்தல்.

4. மாநில தேசிய மற்றும் சர்வதேச அளவில் சமூகப்பணித்திட்டங்கள், படிப்பு போன்றவற்றிற்கு இடையே உள்ள சமநிலையை உறுதிப்படுத்துதல்.

பிரிவு - 25.

**ஆண்டு அறிக்கை**

இக்குழுமம் உரிய படிவத்தில் வருடத்திற்கு ஒரு முறை ஆண்டறிக்கையை தயார் செய்து குழுமத்தின் முந்தைய ஆண்டின் பணிகளையும் குறிப்பிட்டு அறிக்கையினை தயாரித்து தமிழக அரசுக்கு அனுப்பி வைப்பதுடன் அதன் நகலை பொதுமக்களின் பார்வைக்கு அளித்திடும்.

பிரிவு - 26.

**a) கணக்கு வழக்குகளும், தணிக்கைகளும்**

1. குழுமம் கணக்கு வழக்குகளை உரிய முறையில் பராமரித்து தணிக்கையாளர்களிடம் கலந்து ஆலோசித்து பின்னர் தமிழக அரசின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கும்.

2. தமிழ அரசின் தேவைக்கேற்ப தணிக்கையாளர், குழுமத்தின் கணக்கு வழக்குகளை சரிப்பார்த்து தணிக்கை செய்வர்.

பிரிவு - 27.

**விவர அறிக்கைகள் :**

1. குழுமத்தின் சொத்துக்கள் செயல்பாடுகள் போன்றவற்றை அவ்வப்போது தனது விவர அறிக்கையின் மூலம் தமிழகரசுக்கு குழுமம் அனுப்பிவைக்கும்.

பகுதி - **6**

**விதிகளும் மற்றும் ஒழுங்குமுறை விதிகளும் :**

பிரிவு - 28.

**ஒழுங்குமுறை விதிகள் :**

குழுமம் திறம்பட செயல்பட்டு இம்மசோதாவின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பணிபுரிந்து அது குறித்த ஒழுங்குமுறைகளை அரசு குறிப்பேட்டில் வெளியிட வேண்டும். குறிப்பாக எந்த வேறுபாடுகளும் கருதாது அந்த ஒழுங்கு முறைகளும் கீழ் குறிப்பிட்ட விஷயங்களை அனைவருக்கும் அளிக்க வேண்டும்.

1. சமூகப்பணியின் கல்வித்திட்டத்தின் குறைந்த பட்சத்தரம்.

2. சமூகப்பணி கல்வித்திட்டம் மற்றும் பாடத்திற்கு அங்கீகாரம் மற்றும் பதிவு செய்தலின் நடைமுறைகள்.

3. சமூகப்பணி தகுதியை சமநிலைப்படுத்துவதன் நடைமுறைகள்

4. சமூகப்பணியாளர்கள் பதிவு குறித்த நடைமுறைகள்.

5. சமூகப்பணியாளர்களின் குறையை நிவர்த்தி செய்தல் மேல் முறையீடுதல் தற்காலிக பணி ஒத்திவைப்பு மற்றும் சமூகப்பணி கல்வி தற்காலிகமாக ஒத்திவைத்தல் அல்லது அங்கீகாரத்தை ரத்து செய்தல் முதலான வழிமுறைகள்.

6. வல்லுனர்கள் குழுக்களை நியமித்தல்.

7. விதிகள் அமைக்க தேவையான இதர நிகழ்வுகள்.

**a) சமூகப்பணிக்கல்வி திட்டத்தின் தரம் :**

குழுமம் சமூகப்பணி கல்வித்திட்டத்தின் குறைந்த பட்ச தரத்தையும், நிர்னயித்து கீழ்காணும் நிகழ்வுகளில் தரத்தை மேம்மடுத்தும்.

1. மாணவர்களின் பிரச்சினை, சேர்க்கை, மாணவர்களின் ஒத்துழைப்பு, ஒழுக்கம், மதிப்பீடு மற்றும் மறு மதிப்பீடு, வேலையில் அமர்த்துதல் மற்றும் படித்து முடித்த மாணவர்களிடையேயான இணைப்புக்குழு.

2. சமூகப்பணி ஆய்வு, ஆய்வு வெளியீடு மற்றும் மாநாடு, கருத்தரங்குகளில் பங்கேற்பு.

3. சமூகப்பணி விரிவாக்கம், ஆலோசனை தொடர்ச்சியான மற்றும் விரிவாக்கக் கல்வி மற்றும் களப்பணி திட்டங்கள்.

4. சமூகப்பணி கல்வியாளர்களுக்கு சம்மந்தமான விஷயங்கள் : ஆள் தேர்வு பணிப்பளு, பயிற்சி, மதிப்பீடு மற்றும் பதவி உயர்வு.

5. அடிப்படை வசதிகள் : கட்டிடங்கள், திறந்தவெளி, சுகாதார வசதிகள் மேஜை நாற்காலிகள் மற்றும் அலுவலக சாமான்கள், நூலகம் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள்.

6. நிர்வாகம் : நிறுவன அமைப்பு மற்றும் நடைமுறைகள், திட்டமிடுதல் அறிக்கை மற்றும் ஆய்வு அமைப்புகள் மற்றும் நடைமுறைகள், பணியாளர் நிர்வாகம், நிதி நிர்வாகம் மற்றும் செயற்குழுக்கள்.

7. சமூகப்பணிச் சங்கங்கள் : சமூகப்பணி கல்வி திட்டத்திற்கான மாதிரி பாடத்திட்டம்.

b) குழுமம் சமூகப்பணிக்கல்வித் திட்டத்திற்கான மாதிரி பாடத்திட்டத்தை பின்வரும் படிப்புகளுக்கு தயாரிக்கும்.

பட்டப்படிப்பு :

1. இளங்கலைக் கல்வி
2. முதுகலைக் கல்வி
3. முனைவர் பட்டப்படிப்பு
4. முதுகலைத்தத்துவப்படிப்பு

பாடத்திட்டம் கீழ்க் கண்டவைகளை உள்ளடக்கியிருக்கும் :

1. பார்வையும் பணியும்
2. நோக்கமும் குறிக்கோளும்
3. அடிப்படை மற்று விருப்பப்பாடங்கள்
4. சிறப்பு பாடங்கள்
5. களப்பணி
6. ஆய்வு
7. பாடத்தின் அடிப்படை அமைப்பு
8. கற்பித்தல் - கற்றல் முறைகள்

**c) அங்கீகாரம், பதிவு செய்தல் மற்றும் பதிவு நீக்க வழிமுறைகள் :**

குழுமம் சமூகப்பணிக்கல்வி திட்டத்திற்கான அங்கீகாரம் அளித்தல் மற்றும் பதிவு செய்தல் போன்றவற்றிக்கு கீழ்காணும் நடைமுறைகளை உருவாக்கும்.

1. சுய கல்வி உருவாக்குதல் மற்றும் சுய கல்வியை கணினி மூலமாக ஆய்விற்கு உட்படுத்துதல்.
    - சமூகப்பணி கல்வித்திட்டத்திற்கு அங்கீகாரம்
    - சமூகப்பணியாளர்களுக்கு பதிவு செய்தல் மற்றும் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அங்கீகாரம் அளித்தல் போன்றவை
2. அங்கீகாரத்தை விலக்கிக் கொள்ளுதல் மற்றும் பதிவு நீக்கம் செய்வதற்கான நடைமுறைகளின் அடிப்படை மற்றும் வழிமுறைகளை உருவாக்குதல்.
3. மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு சமூகப்பணி நிறுவனமும் சுய ஆய்வறிக்கையையும் மற்றும் குழுமம் கோரும் தகவல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.
4. திறனாளிகள் குழுவின் களப்பணி பார்வைகளை திட்டமிட்டு அவர்கபளிடமிருந்து அறிக்கைகளை பெற வேண்டும்.
5. சமூகப்பணி கல்வித்திட்டத்திற்கு முழு அல்லது தற்காலிக அங்கீகாரம் அளித்தல் மற்றும் பதிவு செய்தல் அல்லது அங்கீகாரத்தை விளக்கிக்கொள்ளுதல், பதிவு நீக்கம் போன்றவைகள்.
6. இந்த மசோதா சட்டமாக்கபடுவதற்கு முன்னர் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய திட்டங்களுக்கும், பாடத்திட்டத்திற்கும் அனுமதி வழங்குதல் அல்லது மறுத்தல்.
7. பதிவு பெற்ற சமூகப்பணி நிறுவனங்களில் அடிப்படை விவரங்களை சேகரித்து பராமரித்தல்.

**d) சமநிலை படுத்துவதன் நடைமுறைகள் :**

குழுமம் நாட்டின் இதர மாநிலங்களில் உள்ள சமூகப்பணி கல்விதிட்டங்களை சமமாக்குவதற்கு தேவையான நடைமுறைகளை மேற்கொண்டு சமூகப்பணித்தகுதிகளை சமநிலைப்படுத்தி ஒன்றுக்கொன்று அங்கீகரிக்கும்.

**e) சமூகப்பணியாளர்களின் நெறிமுறைகள் :**

குழுமம் சமூகப்பணியாளர்களுக்கு கீழகண்டவற்றை உள்ளடக்கிய நெறிமுறைகளை உருவாக்கும்.

1. மதிப்பு மற்றும் உறுதிமொழி
2. சமூகப்பணியாளர்களுக்கு வழிகாட்டுவதற்கான சிறந்த நெறிமுறைகள் அவை சுய மற்றும் தொழில் பொறுப்புகள், மக்கள், சமூதாயம், மாநிலம், சகப்பணியாளர்கள், சமூகப்பணி நிறுவனங்கள், சமூகப்பணிக்கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றின் தொடர்பாக இருக்கும்.

**f) சமூகப்பணியாளர்கள் பதிவு செய்தலுக்கான நடைமுறைகள் :**

குழுமம் சமூகப்பணியாளர்களை பதிவு செய்வதற்கான நடைமுறைகளை கீழ்கண்டவாறு உறுவாக்கிடும்.

1. சமூகப்பணிக்கல்வியை தகுதியாக கொண்ட நபர் பதிவு செய்யப்படலாம்.
2. பதிவேட்டில் உறுப்பினராக உள்ள எவரும் தமிழ்நாட்டின் எந்த பகுதியிலும் சமூகப்பணி கல்வியாளராகவோ அல்லது சமூகப்பணியை செயல்படுத்துவராகவோ, பணிபுரிய தகுதிப்பெற்றவர் ஆவார்.
3. தமிழ்நாடு தவிர்த்து இதர மாநிலங்களில் சமூகப்பணியை தகுதியாகப்பெற்றவர் தமிழ்நாட்டில் பணிசெய்ய விரும்பினால் அவருடைய பெயரை பதிவு செய்யும் வழிமுறையையும் குழுமம் வகுத்தளிக்கும்.

4. அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி கல்வித்தகுதி பெற்று பதிவு செய்யாத எந்த ஒரு நபரும் சமூகப்பணியாளர் தகுதிப்பெறாத, சமூகப்பணியாளர் என்ற அங்கீகாரம் இல்லாத எவரும்

a) தமிழ்நாட்டில் சமூகப்பணியாளர் தகுதி இருக்க வேண்டிய பணியில் அமர்த்தப்படக் கூடாது. அல்லது சமூகப்பணியாளர் பதவியில் இருப்பவர் மட்டுமே நடத்திடக்கூடிய அலுவலகத்தை வைத்து நடத்தக்கூடாது.

b) சமூகப்பணியாளர் மட்டுமே வழங்கிட வேண்டிய சான்றிதழ்களில் கையொப்பம் இடக்கூடாது.

c) ஒரு நபர் சமூகப்பணியாளர் தகுதி பெற்றிருந்தால் இந்த மசோதா அரசிதழ் மூலம் வெளியிடப்பட்டு அமுலுக்கு வந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் பதிவு செய்ய வேண்டும்.

d) குழுமம் வரையறுத்துள்ள நெறிமுறைகளை பதிவுற்ற சமூகப்பணியாளர் கடைப்பிடிக்க வேண்டும். எவரேனும் குழுமம் வரையறுத்துள்ள நெறிமுறைகளை மீறி நடந்துக்கொண்டால் குழுமத்தின் விதி முறைகளுக்கேற்ப அப்பணியாளர்கள் தனது தவற்றை திருத்திக்கொள்வதற்கு அவகாசம் அளிக்கப்படும். அல்லது தற்காலிக பணி நீக்கம் அல்லது பதவி நீக்கம் செய்யப்படுவார்.

e) நெறிமுறைகளை மீறியதற்காக விதிக்கப்படும் தண்டனை விவரங்கள் அரசிதழில் வெளியிடப்படும்.

**g) வல்லுனர் குழுக்கல் :**

a) எப்போதேல்லாம் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் குழுமம் வல்லுனர் குழுக்களை அமைக்கும்.

b) இவ்வல்லுனர் குழு சமூகப்பணி கல்வியாளர்களை கொண்டு அமைக்கப்படும். சமூகப்பணியை செயல்முறை படுத்தபவர்களையும்,

இதரவல்லுனர்களையும் கொண்டு தேவைப்படும்போது குழுக்கள் அமைக்கப்படலாம்.

c) ஒவ்வொரு குழுவும் மூன்று முதல் 4 வரையிலான பதிவுப்பெற்ற சமூகப்பணியாளர்களை உறுப்பினராகக்கொண்டும், ஒரு அமைப்பாள ரைக்கொண்டும் மூன்று வருடக்காலத்திற்கு அமைக்கப்படும்.

d) குழுமம் கீழ்கண்ட குழுக்களை அமைக்கும்.

1. சமூகப்பணிக்கல்வியை ஒழுங்குமுறைப்படுத்த மற்றும் அதன் தரத்திற்குமான குழு
2. சமூகப்பணியாளர்களின் பதிவு மற்றும் நெறிமுறைகளுக்கான குழு
3. சமூகப்பணி மனித வளத்தை திட்டமிடக்குழு
4. மேல்முறையீட்டிற்கும், குறைகளுக்குமான குழு

e) கீழ்கண்ட குழுக்களையும் குழுமம் அமைக்கும்

1. சமூகப்பணி கல்வியின் தரம் மற்றும் ஒழுங்குமுறைக்கான குழு
2. சமூகப்பணி திட்டத்தின் தரத்திற்கான குழு
3. சமூகப்பணியின் பாடத்திட்டங்களின் தரத்திற்கான குழு
4. அங்கீகாரம் மற்றும் பதிவு செய்வதற்கான குழு
5. சமநிலைக்குழு
6. சமூகப்பணியில் தொலைதூரக்கல்வி மற்றும் கணினி வழிக்கல்வியில் தரத்தைக்கொண்டு வருவதற்கான குழு

f) இச்சட்டத்தின் மூலமாக கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் கடமைகள் தவிர குழுமம் அளிக்கும் அதிகாரத்தையும், கடமையையும் வல்லுனர் குழுக்கள் நிறைவேற்றும்.

பிரிவு - 29.

விதிகள்

குழுமம் கீழ்கண்டவற்றிற்கும், மசோதாவின் விதிகள் ஒழுங்குமுறைகளாக தமிழகரசின் குறிப்பாணையில் வெளியிட உரிய பதிந்துரையை அளிக்கும்.

1. குழுமத்தின் உறுப்பினரின் தகுதி நீக்கம் மற்றும் அவரது பொறுப்பினை விடுவித்தல்.
2. குழும உறுப்பினர்களுக்கான ஊதியம் மற்றும் படிகள் குறித்த விவரங்கள்.
3. முழுநேர பணியாளர்களின் நியமனம் ஊதியம் பணியின் சட்டத்திட்டங்கள், வருடாந்திர செயல்திறன் மதிப்பீடு போன்றவை
4. குழுமத்தின் வரவு செலவு திட்டம் மற்றும் அறிக்கைகளை எவ்விதத்தின் பராமரித்தல் போன்றவை.
5. மாநில அரசுக்கு தேவையான விவரங்களை எவ்வடிவத்தில் வழங்குதல்.
6. குழுவின் சொத்துக்களை நிர்வகித்தல்
7. சட்டத்திருத்தங்கள் கொண்டு வருதல்.
8. குழுமத்தை கலைத்தல்
9. விதிகளுக்கு உட்பட்ட மற்ற விஷயங்கள்.